ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்

திகதி 2025.01.31

கட்டடவாக்கத் தொழிற்துறைக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - 2024 திசெம்பர்

கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு கட்டடவாக்கம்), மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 திசெம்பரில் 51.4 ஆகவிருந்து கட்டடவாக்க நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலினை எடுத்துக்காட்டியது. எனினும், தொழிற்துறை வளர்ச்சியினை நிலைநிறுத்துவதற்கு மிகவும் பாரியளவிலான கட்டடவாக்கக் கருத்திட்டங்களின் தேவையை அநேகமான அளவீட்டு பதிலிறுப்பாளர்கள் வலியுறுத்தினர்.

புதிய கட்டளைகள் சுட்டெண் நடுநிலையான அடிப்படை அளவில் காணப்பட்டு, திசெம்பரில் அனுமதிக்கப்பட்ட பல எண்ணிக்கையான கட்டடவாக்கக் கருத்திட்டங்கள் முன்னைய மாதத்தினைப் போன்று அதேமட்டத்திலேயே காணப்பட்டன என்பதை எடுத்துக்காட்டியது. அதேவேளை, தொழில்நிலைச் சுட்டெண் திசெம்பரில் மெதுவான வேகமாயினும் தொடர்ந்தும் சுருக்கமடைந்தது. கொள்வனவுகளின் அளவுச் சுட்டெண்ணானது கட்டடவாக்கப் பணிகளில் விரிவடைதலுக்கிசைவாக அதிகரித்தது. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் திசெம்பரில் நீட்சியடைந்து காணப்பட்டது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொமு சுட்டெண் தொகுப்பு - கட்டடவாக்க அளவீடு

மாறி	நவெ.	திசெ.	+/-	போக்கு
கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)	**51.4**	**51.4**	=	**அதிகரிக்கின்றது, அதே வீதத்தில்**
புதிய கட்டளைகள்	47.2	50.0	+	வீழ்ச்சியிலிருந்து நடுநிலை
தொழில்நிலை	37.5	38.2	+	வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்
கொள்வனவுகளின் அளவு	50.0	52.9	+	நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது
நிரம்பலர்களின் விநியோக நேரம்	51.4	52.9	+	நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கையானது எதிர்பார்க்கப்படும் சாதகமான வானிலை நிலைமைகள் மூலம் முதன்மையாகத் துணையளிக்கப்பட்டு, சாதகமாகக் காணப்படுகின்றது. மேலும், வரவிருக்கும் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினூடாக அரசாங்கத்தின் உட்கட்டமைப்புத் திட்டங்களை நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு கட்டடவாக்கத் தொகுப்பு

நாடு/அதிகார எல்லை	போக்கு
யூரோ வலயம்	வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்
பிரான்ஸ்	வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்
ஜேர்மனி	வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்
அயர்லாந்து	வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது
இத்தாலி	வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது
ஐக்கிய இராச்சியம்	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்

மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 சனவரி 30 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

தொழில்நுட்பக் குறிப்பு:

முறையியல்

சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

சுட்டெண்

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

மாதிரி

மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

மாறிகளின் வரைவிலக்கணங்கள்:

தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் அளவு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.